**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No.1073/2025**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **ராஜகுமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | சோலைகுட்டி | **Calling** | : | **சிறப்பு சார்பு ஆய்வாளர் நகர்மேற்கு காவல் நிலையம் திண்டுக்கல்** |
| **Village** | : | **திண்டுக்கல்** | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **50** |
| | | | **Dated** | : | **24.11.2025.** |

**24.11.2025.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

கூடுதல் சாட்சி–1 திரு. **ரமேஷ்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.**

1. நான் தற்போது திண்டுக்கல் நகர்மேற்கு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த சார்பு ஆய்வாளர் ஜான் பீட்டர் தற்போது அயல்

பணியாக சென்றுவிட்டார். அவரது கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்ற வகையிலும் ஆவணங்கள் அடிப்படையிலும் நான் சாட்சி அளிக்கிறேன். கடந்த 04.07.2025ம் தேதி சார்பு ஆய்வாளர் ஜான் பீட்டர் நிலைய பொறுப்பில் இருந்தபோது ரமேஷ் என்பவர் நிலையம் ஆஜர் ஆகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண். 313/2025 U/s.126(2), 296(b), 115(2),118(1),351(3) BNS ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்னர் அன்றைய தினம் 11.30 மணிக்கு சம்பவ இடம் சென்று பட்டியல் சாட்சிகள் 4,5 முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் , மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகள் முன்னிலையில் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட உடைந்த கலர் கூல்ரிங்ஸ் பாட்டில்களை கைப்பற்றியுள்ளார். சாட்சி 1 முதல் 5 வரை உள்ளவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி RPR நம்பர் பெற்றுள்ளார். காயம்பட்ட ரமேஷ்க்கு சிகிச்சை அளித்த மருத்துவரிடம் காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கின் தன் விசாரணையை முடித்து. எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.**முதல் தகவல் அறிக்கை அதசாஆ.2, பார்வை மகஜர் அதசாஆ.3, வரைபடம் அதசாஆ.4, அத்தாட்சி அதசாஆ.5, படிவம் 91 அதசாஆ. 6, காயச்சான்று அதசாஆ.7, உடைந்த கலர் கூல்ரிங்ஸ் பாட்டில்கள் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அதன்பேரில் புகார்தாரர் எந்த ஒரு புகார் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் வழக்கிற்கான ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றாலும் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.11.24 12:57:35 +0530

Judicial Magistrate No.I

Dindigul.